## திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(செப்டம்பர் 16-ம் தேதி முதல் செப்டம்பர் 20-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (11.9.15- 14.9.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 2.5 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 33 - 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 |
| வானம் (ஆக்டா) | 2 - 4 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 61 - 67 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 44 - 56 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0 - 2 |
| காற்றின் திசை | 0 - 320 |

**20.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>16.9.15 | நாள் 2<br>17.9.15 | நாள் 3<br>18.9.15 | நாள் 4<br>19.9.15 | நாள் 5<br>20.9.15 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 2 | 15 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 36 | 36 | 36 | 33 | 33 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 25 | 25 | 25 | 25 |
| வானம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 49 - 65 | 51 - 67 | 52 - 68 | 59 - 69 | 65 - 75 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2 / வடமேற்கு | 2 / வடமேற்கு | 2 / வடமேற்கு | 2 / வடமேற்கு | 2 / வடமேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| வடகிழக்கு பருவமழை பருவ சாகுபடி | முன்பருவ விதைப்பு செய்தல் | மானாவாரியில் பருத்தி மற்றும் சோளம் சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் அந்தந்த பகுதிகளில் எதிர்பார்க்கப்படும் இயல்பாக பருவமழை தொடங்கும் சமயத்தின் அடிப்படையில் வழக்கமாக பருவமழை தொடங்கும் சமயத்திற்கு 2 வாரங்களுக்கு முன்பு பருத்தி மற்றும் சோளத்தை முன்பருவ விதைப்பு செய்யவும். முன் பருவ விதைப்பு செய்வதால் தொடக்கத்தில் கிடைக்கும் மழையை |

| | | |
|---|---|---|
| | | திறம்பட பயன்படுத்திக்கொள்ள இயலும். |
| | விதையளவு | மானாவாரியில் சோளத்தை முன்பருவ விதைப்பு செய்வதற்கு 22.5 கிலோ/எக்டர் என்ற அளவில் (பரிந்துரைக்கப்படும் விதையளவின் 1.5 மடங்கு) விதைகளை பயன்படுத்தவும். |
| | விதை கடினப்படுத்துதல் | மானாவாரியில் முன்பருவ விதைப்பு செய்யப்படும் சோளத்தின் முளைப்புத்திறனை மேம்படுத்த விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். விதைகளை 2 சத பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து பின்பு முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும். ஊறவைப்பதற்கு விதைகளின் கொள்ளளவிற்கு சரிசமமான அளவு கரைசலை பயன்படுத்தவும். |
| | பூச்சிக்கொல்லி விதை நேர்த்தி | மானாவாரியில் சோளத்தில் பூச்சி தாக்குதலை குறைக்க விதைகளை 15 கிராம் குளோர்பைரிபாஸ் + 150 மி.லி. பசையுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்கவும். |
| | உயிர்உர விதைநேர்த்தி | மானாவாரி சோளம் மற்றும் பருத்தியில் உரத்தேவையை குறைக்கும் விதத்தில் உயிர் உரங்களை பயன்படுத்தவும். 3 பாக்கெட்டுகள் அசோஸ்பைரில்லம், 3 பாக்கெட்டுகள் பாஸ்போபாக்டீரியா அல்லது 6 பாக்கெட்டுகள் அசோபாஸ் உடன் விதைகளை விதைநேர்த்தி செய்து விதைக்கவும். விதை கடினப்படுத்துதல் மற்றும் பூச்சிக்கொல்லி விதைநேர்த்தி ஆகியவற்றை முடித்தபிறகு இறுதியாக உயிர் உர விதைநேர்த்தி செய்யப்பட வேண்டும். |

குறுஞ்செய்தி-: மழை: 19 முதல் 20ம் தேதி வரை: 2& 15 மி.மீ. மானாவாரி- பருத்தி& சோளம்- அந்தந்த பகுதிகளில் வழக்கமாக பருவமழை தொடங்கும் சமயத்திற்கு 2 வாரங்களுக்கு முன்பு முன்பருவ விதைப்பு செய்யவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி